### கடந்த மூன்றாண்டு கால திராவிட மாடல் ஆட்சியில்

# திருக்கோயில்களின் வைப்பு நிதியில் - 1100 கிலோ தங்கம்!

## சட்டப்பேரவையில் – அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு பெருமிதம்!

சென்னை, ஜன. 10 -

**சட்டப்பேரவையில் நேற்று, கேள்வி நேரத்தின்போது பதிலளித்த இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, "இந்து சமய அறநிலையத் துறையின் சட்டத்தின்படி கடந்த மூன்றாண்டு கால திராவிட மாடல் ஆட்சியில் 1100 கிலோ தங்கம், திருக்கோயில்களின் வைப்பு நிதியாக இருப்பு வைக்கப்பட்டுள்ளது" என்று பெருமிதத்துடன் தெரிவித்தார்.**

சட்டப்பேரவையில் நேற்று இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு: -

**பால் மனோஜ் பாண்டியன்:** ஆலங்குளம் தொகுதி, நெட்டூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், பூலாங்குளம் காளியம்மன் திருக்கோயில் மற்றும் பாப்பாகுடி திருக்கடுக்கை மூன்றீஸ்வரர் திருக்கோயில் ஆகியவற்றிற்கு குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:–** கேள்வி கேட்பவர் மனோஜ் பாண்டியன். கேட்கப்பட்ட கேள்விகள் அம்மன் திருக்கோயில் ஒன்று குடமுழுக்கு நடத்தப்படுமா, முனீஸ்வரர் திருக்கோயில் ஒன்று குடமுழுக்கு நடத்தப்படுமா, அதேபோல் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் குடமுழுக்கு நடத்தப்படுமா? அம்மனுக்கு ஒன்று, ஈஸ்வரனுக்கு ஒன்று, அதேபோல் முருகனுக்கு ஒன்று. இந்த மூன்று கோயில் திருப்பணிகளும் மேற்கொள்ளப்படும். அவர்கள் கேட்ட சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் குடமுழுக்கு முடிவுற்றது. மற்ற இரண்டு திருக்கோயில்களின் திருப்பணிகள் விரைவாக எடுத்துக்கொள்ளப்பட்டு, இந்த ஆண்டு இறுதிக்குள் குடமுழுக்கு நடத்தப்படும் .

**பால் மனோஜ் பாண்டியன்:** அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலுள்ள கடையம் ஒன்றியத்திலுள்ள பாப்பான்குளம் கிராமத்தில் அமைந்துள்ள கருத்தீஸ்வரர் சமேத அழகம்பாள் கோயிலுக்கும், அதேபோல் பள்ளத்தாள் புதுக்குடி ஸ்ரீதேவி சமேத வெங்கடாசலபதி பெருமாள் திருக்கோயிலுக்கும், இந்த இரண்டு திருக்கோயில்களுக்கும் திருப்பணி மற்றும் கும்பாபிஷேகம் நடத்துவதற்கு அமைச்சர், ஆவன செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கிறேன். ஏற்கெனவே அமைச்சர் அவர்கள், குடமுழுக்கு செய்யப்படும் என்பதைத் தெரிவித்திருக்கின்றார்கள். அந்தக் கோயிலில், அதாவது முதலில் கேட்கப்பட்ட உச்சிமாகாளி திருக்கோயிலைப் பொறுத்தவரையில் அங்கே இராஜகோபுரம்



மற்றும் விமானம் மற்றும் தலைத் தளம் அமைப்பதற்கும் அமைச்சர் , நடவடிக்கை எடுப்பார்களா ?

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** உறுப்பினர் கேட்ட உச்சிமாகாளியம்மன் திருக்கோயிலில் மடப்பள்ளியும், அதேபோல், சிலைகள் பாதுகாப்பு அறையும் ஏற்கெனவே கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றது. நீங்கள் கேட்ட திருமுனீஸ்வரர் திருக்கோயில் என்பது 1942 ஆம் ஆண்டு குடமுழுக்கு நடத்தப்பட்டிருக்கின்றது. தற்போது அது வல்லுநர் குழு, தொழில்நுட்ப குழு அனுமதி பெற்று, சுமார் 40 இலட்ச ரூபாய் செலவில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, உறுப்பினர் கேட்ட வெங்கடாசபதி திருக்கோயில் என்பது ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோயில். திருக்கோயில்களுக்கு அரசு ஒதுக்குகின்ற 2023 - 2024 ஆம் ஆண்டுக்கான 8 கோடி ரூபாய் நிதியிலிருந்து சுமார் 4 கோடியே 27 இலட்சம் ரூபாய் செலவில் 8 திருப்பணிகள் மேற்கொள்ள உத்தரவு பெறப்பட்டிருக்கின்றது. இந்த மாத இறுதியில் குடமுழுக்குண்டான பாலாலயம் திருப்பணிகள் ஆரம்பிக்கப்படும்.

**பால் மனோஜ் பாண்டியன்:** இல்லையென்று சொல்லாத நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, திருக்கோயில்களில் cell phoneம் உண்டியலில் போடப்படுகின்றது; அதேபோன்று தங்க ஆபரணங் களும் போடப்படுகின்றது. cell phoneஐ பொறுத்த வரையில் ஏலத்தில் கொடுக்க முடியும். ஆனால், பயன்படுத்தப்பட முடியாத தங்க ஆபரணங்களை அம்மனுக்கோ அல்லது அந்தக் கோயிலில் செலுத்த முடியாத, பயன்படுத்த முடியாத தங்க ஆபரணங்களை உருக்கி, அதனை தங்க கட்டிகளாக மாற்றி deposit செய்வதற்காக இந்த அரசிடம் ஏதாவது திட்டங்கள் உள்ளதா? அதற்காக பின்பற்றக்கூடிய வழிமுறைகள் என்ன?

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** அந்த cell phoneஐகூட முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, நேற்றைய தினம் தினேஷ் என்பவரிடம் ஏலம் கோரப்பட்டு, அதிக ஏலத் தொகை பத்தாயிரம் ரூபாய் கேட்டதன் அடிப்படையில், அவரிடம் அந்த cell phone நேற்று ஒப்படைக்கப்பட்டுள்ளது. தீர்வு காண முடியாத பிரச்சினைகளுக்கும் தீர்வு காணுகின்ற ஒரே அரசு திராவிட மாடல் அரசு என்பதற்கு அது ஒரு எடுத்துக்காட்டு.

பலமாற்று பொன் இனங்களை உருக்குவது சம்பந்தமான ஓர் அரசாணை கடந்த 10 ஆண்டுகளில் கிடப்பிலே இருந்தது. தமிழக முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, பக்தர்களிடமிருந்து வருகின்ற பயன்பாட்டில் இல்லாத பலமாற்று தங்க இனங்களை மீண்டும் பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டுமென்று திட்டமிட்டு, அதற்கென்று 3 நீதிபதிகள் அடங்கிய ஒரு குழுவை நியமித்தார். அந்த மூன்று நீதிபதிகளும் மூன்று region ஆகப் பிரிக்கப்பட்டு, உச்ச நீதிமன்ற நீதிபதி ராஜு அவர்களின் தலைமையில் ஒரு குழுவும், உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி மாலா அவர்களின் தலைமையில் ஒரு குழுவும், உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி ரவீந்திரபாபு அவர்களின் தலைமையில் ஒரு குழுவும் பிரிக்கப்பட்டது.

இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டவுடன் நம்முடைய தோழர்கள் குறிப்பாக, பாரதிய ஜனதா இயக்கத்தைச் சார்ந்தவர்கள், அனைத்து திருக்கோயில்களின் வாசல்களிலும் அம்மன் சிலையை அமைத்து, அதில் பொருட்களையும், நகைகளையும் பறிப்பது போன்ற cartoonகளை அமைத்தார்கள். முதலமைச்சர் அவர்கள், இப்படி இவர்கள் எதிர்க்கிறார்கள் என்றால் அது நிச்சயமாக பயனுள்ள திட்டமாக இருக்கும். ஆகவே, அதை விடாதே! பிடி என்றார். அதைப் பிடித்ததன் காரணமாக இன்றைக்கு 1,100 கிலோ அளவிற்கு வங்கிகளிலே வைப்பீட்டு நிதியாக வைக்கப்பட்டு, ஆண்டிற்கு ரூ.11 கோடி திருக்கோயில்களுக்கு வருமானமாக வரப்பெற்றிருக்கிறது.

மேலும், இந்தத் திட்டம் தொடரும். கடந்த காலத்தில் 1959 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்து சமய அறநிலையத் துறை சட்டத்தின்படி இதுவரையில் திருக்கோயில்களின் வைப்பு நிதியில் இருக்கின்ற தங்கத்தினுடைய மொத்த அளவு 610 கிலோ. ஆனால், இந்த மூன்று ஆண்டுக்கால ஆட்சியில் வைப்பு நிதியாக வைக்கப்பட்டிருக்கின்ற தங்கத்தினுடைய அளவு 1,100 கிலோ.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.




தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

**சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி**

**இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு**

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 4, 8–இல் எட்டு சட்டமன்றத் தொகுதிகளுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி, கீழ்க்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 10.01.2025 வெள்ளிக்கிழமை | காலை 10.00 மணி | 4 | தருமபுரி | செங்குந்தர் திருமண மண்டபம், குமாரசாமிப்பேட்டை, தருமபுரி. |
| | மாலை 3.00 மணி | | பென்னாகரம் | மல்லிகா திருமண மஹால், பென்னாகரம். |
| 11.01.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | | கோபிசெட்டிப்பாளையம் | இராமயம்மாள் திருமண மண்டபம், கோபிசெட்டிப்பாளையம். |
| | மாலை 3.00 மணி | | பவானிசாகர் | கவரா மஹால், சத்தி – அத்தாணி சாலை, சத்தியமங்கலம். |
| 12.01.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | | பவானி | பாவா திருமண மண்டபம், கவுந்தப்பாடி, பவானி |
| | மாலை 3.00 மணி | | அந்தியூர் | எஸ்.எம்.பி. திருமண மண்டபம், அத்தாணி, அந்தியூர் |
| | காலை 10.00 மணி | 8 | முதுகுளத்தூர் | ஸ்ரீ சர்வ விநாயகா சாய் மஹால், முதுகுளத்தூர். |
| | மாலை 3.00 மணி | | பரமக்குடி | ஏ.பி.ஷா. மஹால், உலகநாதபுரம், பரமக்குடி. |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல், இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 08-01-2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி


### அரசுப் பணியில் ஒப்பந்த அடிப்படையிலுள்ள

# மாற்றுத் திறனாளிகளை நிரந்தர பணியில் அமர்த்த வேண்டும்!

## சட்டப்பேரவையில் – ஆயிரம் விளக்கு கழக எம்.எல்.ஏ., டாக்டர் நா.எழிலன் கோரிக்கை!

**சென்னை, ஜன.10-**

***சட்டப்பேரவையில் நேற்று, ஆளுநர் உரை மீதான விவாதத்தில் கழகத்தின் சார்பில் பங்கேற்றுப் பேசிய ஆயிரம் விளக்கு தொகுதி எம்.எல்.ஏ., டாக்டர் எழிலன், "அரசுப் பணியில் ஒப்பந்த அடிப்படையிலுள்ள 'மாற்றுத் திறனாளிகளை நிரந்தர பணியில் அமர்த்த வேண்டும்!" என்று வலியுறுத்தினார்.***

சட்டப்பேரவையில் நேற்று ஆயிரம் விளக்கு தொகுதி கழக சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் நா.எழிலன், ஆளுநர் உரை மீதான விவாதத்தில் ஆற்றிய உரை வருமாறு:-

சட்டப்பேரவையில் அவர் பேசியதாவது:-

ஆளுநருக்கு நன்றி தெரிவிப்பதா, இல்லை ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிப்பதா என்ற கேள்வியுடன் என் உரையைத் தொடங்குகின்றேன். ஆளுநருக்குத்தான் நன்றி தெரிவிக்க வேண்டும். ஏனென்றால், இன்று நம் தமிழ்நாட்டு முதல்வர் அவர்கள் மாநில உரிமைகளுக்காக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, மாநில சுய ஆட்சியில் நம் குடியரசு திகழும் என்ற முன்னுரையை இன்று தொடங்கியுள்ளார். அதன் தொடர்ச்சியாக வரும் காலத்தில் ஆளுநர் பதவிகள் இல்லாமல் போகும். அப்படி ஆளுநர் பதவி இல்லாமல் போனால், யார் ஆளுநர் உரை வாசிப்பது என்ற ஓர் கேள்விக்கு பேரவைத் தலைவர் அவர்கள்தான் ஆளுநர் உரையை வாசிப்பார் என்று இரண்டு முறை இந்த நூற்றாண்டு சட்டமன்றத்தில் எடுத்துக்காட்டாக விளக்கிய இந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சூழலை உருவாக்கிய ஆளுநர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சர்.ஜான் மார்ஷல் சிலை**

ஒவ்வாமை என்றால் allergy என்று மருத்துவத்தில் பொருள். தமிழ்நாட்டில் சில பேருக்குத் திராவிட ஒவ்வாமை உள்ளது. திராவிடக் கருத்தில் ஒவ்வாமை உள்ளது. திராவிட மாடல் ஆட்சியில் ஒவ்வாமை உள்ளது. அந்த ஒவ்வாமைக்கு அடிப்படைக் காரணம் என்னவென்றால், ஜனவரி 5 ஆம் நாள் நம் தமிழ்நாட்டு முதல்வர் அவர்கள் எழும்பூர் அருங்காட்சியகத்தில் சிந்துவெளி நாகரீகம் பண்பாட்டு கண்டுபிடிப்பு என்ற மாபெரும் ஒரு அறிவியல்ரீதியான கருத்தரங்கத்தைத் தொடங்கி வைத்தார். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கருத்தரங்கத்தில் இந்த சிந்துவெளி நாகரீகம் சமஸ்கிருத நாகரீகத்திற்கு முன் உள்ள நாகரீகம் என்று உலகத்திற்கு வெளிச்சம் காட்டிய சர் ஜான் மார்ஷல் அவர்கள் சிலைக்கு அடிக்கல் நாட்டினார். அந்தச் சிந்துவெளி நாகரீகத்திற்கும், கீழடி நாகரீகத்திற்கும் உள்ள தொடர்பினை வெளிப்பாட்டுவிதமாக பல்வேறு அறிவியல் சார்ந்த அகழ்வாராய்ச்சியாளர்கள் தங்களுடைய கண்டுபிடிப்புகளுக்கு வெளிப்பாட்டுத் தளம் அமைத்துக் கொடுத்தார். அப்போது 3,500 வருஷத்திற்குள்ள சிந்துவெளி நாகரீகத்திற்கும், கீழடி நாகரீகத்திற்கும், சங்க இலக்கியங்கள் தொடர்பு, பல்வேறு கூறுகளுக்கும், இப்போது 2024 ஆம் ஆண்டு உள்ள திராவிட மாடல் ஆட்சிக்கும் என்ன தொடர்பு என்று கேட்டால், சிந்து வெளி நாகரீகத்தில் உள்ள மண்பானை; அது கருப்பு, சிவப்பு நிறத்தில் உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) கீழடி நாகரீகத்தில் உள்ள மண்பானை கருப்பு, சிவப்பு நிறம் உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) கருப்பு, சிவப்பு நிறம் கொண்டு திராவிட மாடல் ஆட்சி செய்யும் திராவிட மாடல் முதல்வர்தான் அவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) 3,500 வருடத்திற்கு தமிழர்களுடைய தொடர்பப் பாலமாக அமைத்துக் கொண்டிருக்கிறார்.

அதில் பல்வேறு கண்டுபிடிப்புகள் உள்ளன. சுமேரியா நாடுகளுக்கு கடல் வழி வணிகம்; எதை வைத்து அப்போது கடல்வழி வணிகம் செய்தார்கள் என்றால், வானத்தில் உள்ள வெள்ளிக் கிரகத்தின் நடமாட்டம் கொண்டு, கிரகங்கள் அமைப்புக் கொண்டு, நட்சத்திரங்கள் அமைப்புக் கொண்டு, 3,600 வருடங்களுக்கு முன் சிந்துவெளி நாகரீகத்திற்கு தொடர்பு கொண்டு வணிகம் செய்தவர்கள் தமிழர்கள்; வழிபாட்டுத் தலங்கள் அங்கு இல்லை; கோயில்கள் இல்லை; அரண்மனைகள் இல்லை; பகுத்தறிவு அடிப்படையில்தான் அவர்கள் ஆட்சி செய்துள்ளார்கள். அதுபோல்தான், திராவிட மாடல் ஆட்சி பகுத்தறிவு பாதையில் ஆட்சி செய்வதற்கு அடித்தளம் அமைக்கிறார் நம் தமிழ்நாட்டு முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சுமேரியா நாகரீகம் உள்ள வெளிநாட்டு நாகரீகம்போல் நம் தமிழ்நாட்டு முதல்வர் அவர்கள் உலகெங்கும் தமிழ்நாட்டிற்கு முதலீடுகளைக் கொண்டுவர பயணம் செய்கிறார்.

2023லிருந்து 2024 ஆம் ஆண்டு வரை, கிட்டத்தட்ட 10 இலட்சம் கோடி அளவுக்கு முதலீடுகள், (மேசையைத் தட்டும் ஒலி) 299 ஒப்பந்தங்கள், 10 இலட்சம் தமிழர்களுக்கு வேலை வாய்ப்புக்கான அடித்தளம் அமைத்தது நம்முடைய திராவிட மாடல் ஆட்சியோட அங்கிகாரம்.

முதலீடுகள் செய்வதற்கு கட்டுமானம் உள்ள மாநிலம் தமிழ்நாடு. *Most favoured destination for investment*, தமிழ்நாடு; *ease of doing business*ல் தமிழ்நாடு என்று பல்வேறு நிறுவனங்கள் தமிழ்நாட்டை நோக்கி வருகை தருவதற்கான கரணம் நம்முடைய நிர்வாகத் திறன், *political leadership*, பிறகு நம்முடைய கட்டமைப்பு. அந்தக் கட்டமைப்பை உருவாக்கிய நம்முடைய தமிழ்நாட்டு முதல்வர் அவர்களுக்கு பக்கபலமாக அமைவது நம்முடைய துணை முதல்வர் அவர்களின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சகம்.

ஏனென்றால், *Powerful people make portfolios powerful*. ஒரு விளையாட்டுத் துறையை இன்றைக்கு சர்வதேச தளத்தில், தமிழ்நாட்டின் விளையாட்டுத் துறையை நிலைநாட்டுவது மட்டுமல்ல, இன்று சர்வதேச *Asia Cup* ஆக இருக்கட்டும், *World Chess Championship* ஆக இருக்கட்டும், *World Squash Championship* ஆக இருக்கட்டும், *Chess Olympiad* ஆக இருக்கட்டும், இன்று பல்வேறு சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை நடத்தி காட்டி, அதை நோக்கி வெளிநாட்டு முதலீட்டாளர்கள், கட்டுமானங்கள் மற்றும் அமைதியான சூழல் உள்ள தமிழ்நாடு என்கிற காரணத்தால்தான் இன்றைக்கு பல்வேறு முதலீடுகள் தமிழ்நாட்டை நோக்கி வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு சின்ன எடுத்துக்காட்டுடன் சொல்கிறேன். *Formula 4 racing*. நம்முடைய தமிழ்நாட்டில் *Formula 4 racing* நடைபெறும்போது, நம்முடைய தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் அமெரிக்கா பயணம் சென்றிருந்தார்கள். அன்று *Formula 4 racing*ல் ஒரு *drone shot*. என்ன *drone shot* என்றால், அங்கே *car race* ஓர் இடத்தில் வேகமாக போய்க்கொண்டிருக்கிறது. ஒரு பக்கம் நம்முடைய மக்கள் எந்தவகையான பிரச்சினையும் இல்லாமல் அவர்களுக்கான போக்குவரத்து அழகாக போய்க்கொண்டிருந்தது. இதுதான் ஓர் அருமையான எடுத்துக்காட்டு.

**தந்தை பெரியாருக்கு உலகளவில் அங்கீகாரம்!**

ஒவ்வொரு கார் வளைவின்போதும், துணை முதலமைச்சர் அவர்கள் என்ன செய்தார்களென்றால், கார் நுழையும்போது பெரியார் *turn* என்று வைத்தார்கள். மூட நம்பிக்கை உள்ள சமூகத்தை அறிவியல் பாதைக்கு மாற்றிய தந்தை பெரியாருக்கு உலகளவில் அங்கீகாரம் கொடுத்த நம்முடைய துணை முதல்வர் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சூழலில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன் பேரவைத் தலைவர் அவர்களே.

திட்டக் குழு உறுப்பினராகப் பணியாற்ற வாய்ப்பு தந்த தமிழ்நாட்டின் முதல்வர் அவர்களுக்கு நன்றி. அதனால் பல்வேறு திட்டங்களை பகுப்பாய்வு செய்வதற்கு எனக்கு ஓர் அருமையான வாய்ப்பு.

மகளிர் உரிமைத் தொகைத் திட்டம். 62 சதவிகிதம் பெண்கள் மகளிர் உரிமைத் தொகையை சேமிக்கின்றார்கள். அந்தச் சேமிப்பை எதற்காக பயன்படுத்துகிறார்கள் என்றால், மருத்துவ அவசரத்திற்கும்,



பள்ளியில் படிக்கும் குழந்தைகளின் படிப்பு செலவுக்கும் சேமிக்கின்றார்கள்.

காலை உணவுத் திட்டத்தை பகுப்பாய்வு செய்தோம். காலை உணவுத் திட்டம் என்பது சர்வதேச அளவில் போற்றி பாராட்டப்படக்கூடிய ஒரு திட்டம். மாணாக்கர்களின் எழுத்தறிவும், எண்ணறிவும், கூட்டலறிவும் மிகைப்படுத்தியுள்ளது. 30 சதவிகிதம் பள்ளி சேர்க்கையை அதிகரித்துள்ளது. ஆசிரியர்கள், கணக்குப் பாடங்களையும், மொழிப் பாடங்களையும் மாணவர்கள் வெகுவாகப் படிக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். பெற்றோர்கள் ஆனந்தக் கண்ணீருடன் மாதம் 1000/ ரூபாய் அளவிற்கு காலை உணவுத் திட்டத்தால் சேமிக்க முடிகிறது என்று சொன்னதை பகுப்பாய்வுமூலம் கண்டறிந்தோம் என்பதை நான் இந்த மாமன்றத்தில் சொல்ல விருப்பப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ரூ. 560 கோடி அளவில் விடியல் பயணம். அதாவது, பெண்களுக்கான *mobility*. அதாவது அதாவது *gender justice*, அதாவது *gender neutrality*. இந்தியா அளவில், 41 சதவிகிதம் அளவிற்கு உற்பத்தித் தொழிற்சாலைகளில் அதிகமான அளவில் பெண்கள் பணிபுரியும் மாநிலம் நம்முடைய தமிழ்நாடு. அதிகமான தொழில் சொத்துரிமை திட்டத்தினால், அதிகமான பெண் தொழில்முனைவோர் கொண்ட மாநிலம் நம்முடைய தமிழ்நாடு. அதாவது, பெண்களுக்கான தொழில்முனைவுத் திட்டத்தை உருவாக்கி, தமிழ்நாட்டு முதல்வர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் பெண்கள் அதிகார தளத்தில் அமர்ந்திருக்கிற சூழலால்தான் வெளிநாட்டு முதலீடுகள் வருவதற்கு அடிப்படை காரணமாக அமைந்துள்ளது.

**கலைஞர் கைவினைத் திட்டம்!**

'விஸ்வகர்மா' திட்டத்திற்கு எதிர்வினையாற்றுவதற்காக, கைவினைத் திட்டம். ஒன்றிய அரசின் திட்டங்கள், அது தேசிய கல்விக் கொள்கை திட்டமாக இருந்தாலும், விஸ்வகர்மா திட்டமாக இருக்கட்டும். எடுத்துக்காட்டுக்காக ஒன்றை சொல்கிறேன். ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு பொற்கொல்லர் வேலையை, இங்கே நகர்ப்புரத்தில் இருக்கும் ஒரு பெரும் நகை கடையில் பணியாற்றி கற்றுக்கொண்டால், அவர் கிராமத்திற்கு சென்று விஸ்வகர்மா திட்டம்மூலம் ஒரு நகைக் கடையை திறக்க முடியாது. ஏனென்றால் அந்தத் திட்டம் பிறப்பின் அடிப்படையில். ஆனால், கலைஞர் கைவினைத் திட்டம் என்பது பிறப்பின் அடிப்படையில் இல்லை. *It's by choice*. அப்படியென்றால், ஒரு முற்போக்குத் திட்டம் சாதியின் அடிப்படையில், பிறப்பின் அடிப்படையில் இருக்கும் திட்டத்தை மாற்றி, நம்முடைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் கலைஞர் கைவினைஞர் திட்டத்தை கொடுக்கிறார்கள்.

இப்போது பார்த்தீர்களென்றால், புதுமைப் பெண் திட்டமாக இருக்கட்டும், தமிழ்ப் புதல்வன் திட்டமாக இருக்கட்டும், 10 இலட்சம் குழந்தைகளுக்கு 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளியில் தமிழ் வழியில் பயின்றால் மாதம் ஆயிரம் ரூபாய். ஆனால், தேசியக் கல்விக் கொள்கையில் நுழைவுத் தேர்வு வைத்திருக்கிறார்கள். இங்கே கட்டாயத் தேர்ச்சி முறையை நம்முடைய தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் வைத்துள்ளார். ஆனால், 5 ஆம் வகுப்பு, 8 ஆம் வகுப்பில் கட்டாயத் தேர்வு எழுத வைத்து, அவர்களை இடைநிற்றலுக்கு வழி வகுக்கிறார்கள். 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை 4 செமஸ்டர் தேர்வு வைக்கின்றார்கள். பிறகு, கல்லூரி படிப்பில், ஓர் ஆண்டு, இரண்டாண்டு, மூன்றாண்டு எப்போது வேண்டுமானாலும் மாணவர்கள் வெளியேறலாம் என்கிற திட்டத்தைத் தீட்டுகிறார்கள். அப்படியென்றால், கல்வியைவிட்டு வெளியே துரத்தி, விஸ்வகர்மா திட்டமான குலக் கல்விக்கு வழி செய்யும் ஒன்றிய அரசைப் பார்த்து கேள்வி கேட்கிறோம். இங்கே திராவிட மாடல் அரசு பதில் சொல்கிறது; குலக் கல்வித் திட்டத்திற்கு எதிர்ப்பாக, மாணவர்களையும், மாணவிகளையும் கல்வி பயின்று, பட்டதாரிகளாக உயத்தி, இன்றைக்கு *Gross Enrolment Ratio*ல் 50 சதவிகிதம் பெயர் போன எங்களுக்குப் பாடம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள் எப்படி கல்வியை நடத்த வேண்டுமென்று. நாங்கள் தமிழ்நாட்டிலிருந்து பாடம் நடத்திக்கொண்டிருக்கின்றோம்.

எப்படி கல்வி ஜனநாயகப்படுத்துவது, எப்படி கல்வி சமூக நிதி அடிப்படையில் செயல்படுவது, எப்படி கல்வி மொழியின் பாதுகாப்பில் செயல்படுவது, எப்படி கல்வி மாநில உரிமையை செயல்படுத்துவது என்று தமிழ்நாட்டின் முதல்வர் அவர்கள் இந்த நாட்டிற்கு பாடம் நடத்திக்கொண்டிருக்கிறார் பேரவைத் தலைவர் அவர்களே. (மணியடிக்கப்பெற்றது). இறுதியாக இரண்டே இரண்டு கோரிக்கைதான். இந்த சிறப்பு மிக்க சட்டமன்றத்தில் 1974ல் ராஜமன்னார் குழுவின் அடிப்படையில் இங்கு ஒரு தீர்மானத்தை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

அந்தத் தீர்மானம், ஆளுநர் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் விட்டுச்சென்ற ஒரு பதவியாகும். ஆளுநர் நியமனம் குறித்து, நமது அரசியலமைப்பு வகை செய்யப்பட்டுள்ளது. மக்களாட்சி முறை காலத்திற்கு ஒவ்வாத ஒன்றாகும். இவர் ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்ட, ஒன்றிய அரசின் பொறுப்பிலான அதிகாரி ஆவார். எனவே, உள்ளூர் நிலைமைகளையும், அரசியல் நிலைகளையும் இவர் அறிந்திருக்கவும் முடியாது, எதிர்பாக்கவும் முடியாது. ஆளுநர் பதவிக்காக செய்யப்படும் செலவு, சமதர்மத்திற்கும், சமுதாய முறைக்கும் ஏற்றதாக இல்லை என்ற தீர்மானத்தை நாம் முன்மொழிந்துள்ளோம். அதனடிப்படையில் ஒரு சென்னை வாசியாக, பேரிடர்கள் பார்க்கும் ஒரு சென்னை வாசியாக *Green corridor*ஐ அதிகப்படுத்தவேண்டுமென்ற பொறுப்பு நமக்கு இருக்கிறது. மான்கள் சரணாலயத்தை வளர்த்தெடுக்கும் பொறுப்பு நமக்கு இருக்கிறது. அப்போது ஆளுநர் அவர்கள் *Governor should act according to the aid of Council of Ministers*. அதாவது அமைச்சரவையின் அடிப்படையில்தான் இருக்கவேண்டும். அதனால் அமைச்சர்கள் தங்கும் இடத்தில் அவர்களுக்கு வீடு ஒதுக்கிக் கொடுப்பதற்கான கோரிக்கையை கொடுக்கின்றேன். அப்படி அவர் தவறவிட்டால், நீதிபதிகள், அவ்வப்போது நீதிமன்றங்களின் தீர்ப்பு குறித்து ஆளுநர் அவர்களுக்கு பாடம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். நீதிபதிகளின் இல்லங்களும் அங்குதான் உள்ளது. நீதிபதிகளின் இல்லங்களின் பக்கத்திலேயும், அமைச்சர்கள் இல்லங்களின் பக்கத்திலேயும் ஆளுநர் அவர்களுக்கு இடம் கொடுத்து, நாம் இயற்கைப் பேரிடர் காலத்தைப் பாதுகாக்க ஒரு *Green corridor* உருவாக்குவதற்கான (மேசையைத் தட்டும் ஒலி) கோரிக்கையை வைக்கிறேன்.

இரண்டாவது கோரிக்கை, காலகாலமாக 15, 16, 20 வருடங்களாக நம் மாற்றுத்திறனாளிகள் அரசாங்க வேலைவாய்ப்பில் ஒப்பந்த அடிப்படையில் உள்ளார்கள். அவர்களின் பணி நிரந்தரம் தொடர்பான கோரிக்கை வலுவாக இருக்கிறது. உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பின் வழியாக தேர்வாணையத்தின்மூலமாக அவர்களை பணியில் எடுக்கவேண்டுமென்ற ஒரு அடிப்படை முறை இருக்கிறது. அவர்களை தேர்வாணையத்தின் மூலம் எளிதாக அந்த மாற்றுத் திறனாளிகளை நிரந்தர வேலைகளில் சேர்ப்பதற்கான வழி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மார்ச் 1, நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் தமிழ்நாட்டின் முதல்வர் அவர்களின் பிறந்த நாளை மாற்றுத் திறனாளி தினமாக அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.